# தமிழீழ அரசியல்துறை
## POLITICAL WING OF TAMILEELAM

https://thamileelaarasiyalthurai.info
tat.info.international@gmail.com
+(44) 0734 983 8393


TAT20260507-17T

நிர்வாகம்
தமிழீழ அரசியல் துறை
அனைத்து நாடுகள்
07-05-2026

# தமிழீழ விடுதலைப் போருக்கு வலுச்சேர்த்த போராளியான சரவணன் (பசுபதி உமாகாந்தன்) அவர்களுக்கு "தமிழீழ விடுதலைப் போராளி" என மதிப்பளிப்பு!

மனித வாழ்வின் அதியுன்னதமான பண்பாடாக கருதப்படுவது பெற்ற தாயையும், பிறந்த மண்ணையும்,பேணி பாதுகாத்து போற்றுவதாகும். அவ்வழியில் கொள்கை, பற்று உறுதியில் வரலாறு படைத்த, மாற்றுவலுத் திறனாளியாக இருந்தும், தமிழ் குமுகாயத்திற்கு தன்னாலான பணிகளை, இறுதிவரை இலட்சியம் மாறாமல் உறுதியுடன் செயற்பட்ட "சரவணன்" (பசுபதி உமா காந்தன்) அவர்களை நாம் 06.05.2026 அன்று இழந்துவிட்டோம்.

இவரது சாவு தமிழீழ தேசத்திற்கு என்றும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், இலட்சியத்தையும் முழுமையாக ஏற்று, எமது போராட்டத்தின் நெருக்கடியான காலகட்டத்தின் மத்தியில், துல்லியமாகவும், கமுக்கமாகவும் பரிபாசையை பரிமாற்றம் செய்வார். துல்லியமான தகவல் செயற்பாடுகள் போர்க்கள வரலாற்றில் இன்றியமையாதவை. அதில் சரவணன் தனது பெயரை தடமாக பதித்தார். தமிழீழ விடுதலைப் போராட்ட காலங்களில் தொடர்பாடலுக்கு சரவணன் எனும் பெயர் மறக்க முடியாத மிக முக்கிய பெயராக அனைத்துப் பிரிவினருக்கும் இருந்தது என்பது வரலாற்று உண்மை.

1991 ஆண்டு காலப்பகுதியில், விழுப்புண்ணால் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டு, நீண்ட காலம் படுக்கையில் இருந்த நிலையிலும், தான் கொண்ட கொள்கைக்காக இறுதி வரை தடம் மாறாமல் நின்ற இவரது அர்ப்பணிப்பு, காலத்தால் அழியாத வரலாறாகும். இவர் தமிழீழ அரசியல்துறையின் தகவல் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பாளராக இருந்து ஆற்றிய அர்பணிப்பான பணிக்காக தமிழீழத் தேசியத் தலைவராலும், தளபதிகளாலும் பாராட்டைப் பெற்றார். மனிதாபிமானமிக்க, ஆளுமையுள்ள சரவணன் அவர்கள் பொது வாழ்விலும் தன்னால் முடிந்த பங்கினை ஆற்றினார். கிளி-மாற்றுவலுவுள்ளோர் சங்கத் தலைவராகவும் செயற்பட்டார். இக்காலத்திலும் மனிதாபிமான உதவிகளை இச்சங்க உறுப்பினர்களுக்கும் கிடைக்குமாறு செய்தார் தனது கம்பீரக் குரலால் அனைவரையும் அன்புடன் அரவணைக்கும் பண்பு கொண்டவர்.

இவரது இழப்பால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் போராளிகளின் துயரில் தமிழீழ அரசியல் துறையினராகிய நாமும் பங்கு கொள்வதோடு, இவர் தமிழ் மக்களுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் ஆற்றிய மகத்தான பங்களிப்பை கௌரவப்படுத்தும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றி இவரது உறுதியான இனப்பற்றுக்கும், விடுதலை வேட்கைக்கும் மதிப்பளித்து கௌரவிக்கும் முகமாக சரவணன் (பசுபதி உமாகாந்தன்) அவர்கட்கு "தமிமீழ விடுதலைப் போராளி" என்ற உயரிய கௌரவத்தினை வழங்குவதில் தமிழீழ அரசியல்துறையினராகிய நாம் நிறைவடைகின்றோம்.
சத்திய இலட்சியத்திற்க்காக களமாடி வீரசாவடைந்த ஆயிரமாயிரம் மாவீரர்களின் வரிசையில் இவரும் இணைந்து தமிழீழ விடுதலைப் பயணத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். சாவு என்றும் இவர்களின் இலட்சியக் கனவை அழித்துவிடுவதில்லை சரித்திர நாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் என்றும் இவர்கள் கலந்து இருப்பார்கள்.

## "தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

திரு. கி. நல்லையா
நிர்வாகப் பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்.

திரு. இ. இளங்கீரன்
பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்.




தமிழீழ அரசியல்துறை – அனைத்து நாடுகள்

தமிழீழ அரசியல்துறை – ஐக்கிய இராச்சியம்
தமிழீழ அரசியல்துறை – கனடா
தமிழீழ அரசியல்துறை – சுவிச்சர்லாந்து
தமிழீழ அரசியல்துறை – பிரான்சு
தமிழீழ அரசியல்துறை – அவுஸ்திரேலியா
தமிழீழ அரசியல்துறை – யேர்மனி
தமிழீழ அரசியல்துறை – நியூசிலாந்து
தமிழீழ அரசியல்துறை – அமெரிக்கா
தமிழீழ அரசியல்துறை – ஸ்கொட்லாந்து
தமிழீழ அரசியல்துறை – நோர்வே
தமிழீழ அரசியல்துறை – டென்மார்க்
தமிழீழ அரசியல்துறை – பின்லாந்து